## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 3-7 - பயிலும்
### (அடியார்களிடத்தில் ஆளானார்க்குத் தாம் ஆட்பட்டிருத்தலை அருளிச் செய்தல்)

2963 * பயிலும் சுடரொளி மூர்த்தியைப் * பங்கயக் கண்ணனை *
பயில இனிய * நம் பாற்கடல் சேர்ந்த பரமனை **
பயிலும் திருவுடையார் * யவரேலும் அவர் கண்டீர் *
பயிலும் பிறப்பிடை தோறு * எம்மை ஆளும் பரமரே 1

2964 ஆளும் பரமனைக் கண்ணனை * ஆழிப்பிரான் தன்னை *
தோளும் ஓர் நான்குடைத் * தூமணிவண்ணன் எம்மான் தன்னை **
தாளும் தடக்கையும் கூப்பிப் * பணியும் அவர் கண்டீர் *
நாளும் பிறப்பிடை தோறு * எம்மை ஆளுடை நாதரே 2

2965 நாதனை ஞாலமும் வானமும் ஏத்தும் * நறுந்துழாய்ப்
போதனை * பொன் நெடுஞ்சக்கரத்து * எந்தை பிரான் தன்னை **
பாதம் பணிய வல்லாரைப் * பணியும் அவர் கண்டீர் *
ஓதும் பிறப்பிடை தோறு * எம்மை ஆளுடையார்களே 3

2966 உடையார்ந்தவாடையன் * கண்டிகையன் உடைநாணினன் *
புடையார் பொன்னூலினன் * பொன்முடியன் மற்றும் பல்கலன் **
நடையாவுடைத் திருநாரணன் * தொண்டர் தொண்டர் கண்டீர் *
இடையார் பிறப்பிடை தோறு * எமக்கு எம் பெருமக்களே 4

2967 பெருமக்கள் உள்ளவர் தம் பெருமானை * அமரர்கட்கு
அருமை ஒழிய * அன்று ஆரமுதூட்டிய அப்பனை **
பெருமை பிதற்ற வல்லாரைப் * பிதற்றும் அவர் கண்டீர் *
வருமையும் இம்மையும் * நம்மை அளிக்கும் பிராக்களே 5

2968 அளிக்கும் பரமனைக் கண்ணனை * ஆழிப்பிரான் தன்னை *
துளிக்கும் நறுங்கண்ணித் * தூமணிவண்ணன் எம்மான் தன்னை **
ஒளிக்கொண்ட சோதியை * உள்ளத்துக் கொள்ளும் அவர் கண்டீர் *
சலிப்பின்றி யாண்டு எம்மைச் * சன்ம சன்மாந்தரம் காப்பரே 6

2969 சன்ம சன்மாந்தரம் காத்து * அடியார்களைக் கொண்டு போய் *
தன்மை பெறுத்தித் * தன் தாளிணைக் கீழ்க் கொள்ளும் அப்பனை **
தொன்மை பிதற்ற வல்லாரைப் * பிதற்றும் அவர் கண்டீர் *
நம்மை பெறுத்து எம்மை * நாளுய்யக் கொள்கின்ற நம்பரே 7

2970 நம்பனை ஞாலம் படைத்தவனைத் * திருமார்பனை *
உம்பர் உலகினில் யார்க்கும் * உணர்வரியான் தன்னைக் **
கும்பி நரகர்கள் ஏத்துவரேலும் * அவர் கண்டீர் *

எம் பல்பிறப்பிடை தோறு * எம் தொழு குலம் தாங்களே 8

2971 குலம் தாங்கு சாதிகள் * நாலிலும் கீழிழிந்து * எத்தனை
நலந்தானிலாத * சண்டாள சண்டாளர்கள் ஆகிலும் **
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் * மணிவண்ணற்கு ஆளென்று உள்
கலந்தார் * அடியார் தம் அடியார் எம்மடிகளே 9

2972 அடியார்ந்த வையம் உண்டு * ஆலிலை அன்ன வசஞ்செய்யும் *
படியாதுமில் குழவிப்படி * எந்தை பிரான் தனக்கு **
அடியார் அடியார் தம் அடியார் அடியார் * தமக்கு
அடியார் அடியார் தம் * அடியார் அடியோங்களே 10

2973 * அடியோங்கு நூற்றுவர் வீய * அன்று ஐவருக்கு அருள் செய்த
நெடியோனை * தென்குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள் **
அடியார்ந்த ஆயிரத்துள் * இவை பத்து அவன் தொண்டர் மேல்
முடிவு * ஆரக் கற்கில் * சன்மம் செய்யாமை முடியுமே 11

**அடிவரவு:** பயிலும் ஆளும் நாதனை உடையார் பெருமக்கள் அளிக்கும்
சன்ம நம்பன் குலம் அடியார் அடியோங்கு முடியான்